2867
Tamil

பாரதமாதா துணை

சென்னை சர்க்கார் மாஜி பிரதம மந்திரி

கனம் C. ராஜகோபாலாச்சாரியார்

# அரஸ்டு பாட்டு

காங்கரஸ் தலைவர்கள் சிறைச்சென்ற ரிஸல்ட்டும்
அடங்கியது



தேச தொண்டர் K. T. R. வேணுகோபால் தாஸ்
எழுதியது

**V. R. பெருமாள் நாயுடு**
பிரசுரம் செய்யப்பட்டது.

உ

பாரதமாதா துணை.

சென்னை மாஜி-பிரதம மந்திரி

# கனம் C. ராஜகோபாலாசாரியார் பேரில் தேசீய கீதம்

பாரில் இந்தி படிப்பதினால் என்ற மெட்டு

முதல் மந்திரி ராஜாஜியை அரஸ்டு செய்தனரே
மாதேசிய தலைவர்களை பிடித்து சென்றனரே
கண்டோர் மனம் பதைத்தனரே ரி

சுதந்திரமேதான் ததும்பும் தேசவிஸ்வாசி
சமரசமே நடத்தும் ஞானசண்யாசி
சென்னை மாகாணமதில் புகழ்ந்திடுநேசி
நம் காந்தி மகான் கட்டளையை அவனியில் பேசி
சிறைசென்ற விஸ்வாசி மு

மாம்பலத்தில் ஏகஜனம் சூழ்ந்திடலாச்சு
மாபெரும் தலைவர்களும் பேசிடலாச்சு
பங்களாமுன் தொண்டர்களும் சேர்ந்திடலாச்சு
ஜே—கோஷமது வானமதை பிளந்திடலாச்சு
கண்டோர் புகழ்ந்திடலாச்சு மு

யுத்தகமிட்டி மெம்பர்கட்கு சடிதமே விடுத்தார்
உதவி செய்யகூடாதென்று அவனியிலுரைத்தார்
அவசரமாகவல்லோ வாரண்டுதந்தார்
அதிவிரைவுடனே கோர்டினிலே ஆஜரும் செய்தார்
செக்ஷன் தீர்ப்பையும் கொடுத்தார் மு

மினிஸ்டருக்கு மரியாதைகள் அவனியில் கொடுத்தார்
மேன்மையாக வருடம் ஒன்று தண்டனை விதித்தார்
நம் தேசிய தலைவரின்று சிறைதனில் நுழைந்தார் அந்த
நீதிபதி ஆபிசர்க்கு வந்தனம் தந்தார்
வேணுகவி தனை புகன்றார் மு

NATIONAL ARCHIVES LIBRARY
No 2867
Date 6.3.72
GOVT. OF INDIA

செங்கோட்டை இளஞ்சிங்கமே என்ற மெட்டு

பல்லவி

சென்றாரே சிறைசாலையில்
ராஜாஜி தமிழ் நாட்டினில் செ

அநுபல்லவி

கண்டோர்கள் மனமது கலங்கிடவே
காருண்யகாந்தியின் வார்த்தை யுணர்ந்திடவே செ

தொகையரா

தமிழ்மாகானமதில், முதன்மந்திரியாகவே
தியாகமே செய்தவள்ளல்
பூமியில் மதுவரக்கனை ஓட்டியே ஜெயம்கொண்ட
இணையிலா தேசவள்ளல் செ

பாட்டு

ஜாதிமதமென்னும் பேதகம் தீர்ந்திடவே
ஆலயமெங்கிலும் அரிஜனம் நுழைந்திடவே செ

தொகையரா

அன்னியர் யுத்தமதை பாரினில் எதிர்க்கவே
அதிகாரபதவி விடுத்தார்
தன்னுடன் சேர்ந்த ஒன்பது பேர்களும்
தவராது வெளியில் சென்றார் செ

பாட்டு

தாய்நாட்டினில் சேவைகள் செய்திடவே
தென்தேச மக்களை பாரினில் காத்திடவே செ

தொகையரா

பத்தொன்பதாம் நாற்பதில் டிசம்பர் இரண்டினதில்
எதிர்பெனும் கோஷம் செய்தார்
அதர்க்காக ஒருவருடம் தண்டனை அடைந்துமே
அவனியில் சிறைசென்றார்

பாட்டு

காந்தியின் கட்டளை போல்நடக்க
கவிராஜன் வேணுகவி உலகினிலே செழிக்க செ

## சென்னை தொழிளாளர் இலகா மந்திரி

## வி. வி. கிரி அவர்கள்

மஞ்சள் பெட்டி என்ற மெட்டு

தொழிளாளர் மந்திரி வி. வி. கிரியும்
சிறைதனிலே நுழைந்தார் ஏழைகள்
சஞ்சலமே அடைந்தார்

தோழரும் உலகினில் (தொண்டருக்காக)
திரிமையாகவே (சமரசமாக)
கள்ளமில்லாதிவர் உழைத்தனர் வேலை
கக்ஷிபேதமே கினவிலும் நினையா
வீரதியாகமே உலகில்
செய்தார் யோகமே

கம்பெனி பலபேர், வேலைகள் நிருத்த
கமிஷன்யாவருடன் வாதமே நடத்த
வெம்பிடும் முதலாளி நேரினில் அடுத்தே
ஒற்றுமையாகவே ஜெயமது கொடுத்த
தேசபக்தராம் தேர்ச்சியாய் பேசும் தீரராம் தொ

காந்தியின் கட்டளை வந்ததினாலே
கோஷங்கள் செய்திவர் பேசியதாலே
சாந்தமாய் சர்க்கார் பிடித்ததினாலே
ஜட்ஜியும் பதினைந்து மாதம் பின்னாலே
சென்றார் சிறையே வேணுகவி சந்தமுறையே தொ

## வைத்ய இலாகா மந்திரி

## டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள்

ஆலம்படைத்தவனே என்ற மெட்டு

டாக்டர் ராஜன் சிறை சென்றார்—காந்தி
வார்த்தையே உணர்ந்தார்
மிக்கபுகழ்படைத்த—தலைவர்களில் முதல்வராம்
மந்திரியாக இன்று தொண்டுகளே செய்தவராம்
திருச்சிநகர்தனிலே-பிறந்த தேசாபிமானியாய் வாழ்ந்த (டா)

காந்திமகானுரைத்த கட்டளேயே பின்தொடர்ந்தார்
கோஷங்களே யரைந்து கோட்டிசை யேதானளித்தார்
சட்டமதையெ திர்தார் உலகில்
சிறைதனில் நுழைந்தார் (டா)

சுகாதார முறையில் ஜெகந்தனிலே சீர்திருத்தி
சோதர்க்காக பல நன்மைகளே யேநடத்தி
பாரத நாட்டு வீரன்—செந்தமிழால்
பாடிடும் வேணுதயாளன்

விவசாய இலாகா மந்திரி

ஸ்ரீஜத் டி. பிரகாசம் அவர்கள்

இந்து நேசவங்க தேக என்ற மெட்டு

ஆந்திர பிரகாச சிங்கம் அவனியில் சிறை சென்றனர்
சாந்தமாக கோஷம் செய்து சாக்காரை எதிரித்தனர்
இந்தியா சுதந்திறமே அடைந்திட முயன்றனர்
காந்தியின் சொல் வாக்கியத்தை காலத்தில் மதித்தனர் ஆ

தொகையரு

ஏழையாம் விவசாய மந்திரியாகவே
இனியிலாதொண்டு செய்தார்
கோழைகள் வாங்கிடும் அதிக வட்டியை
குறைக்கவே தொண்டு செய்தார்
பாழான பஞ்சத்தால் பதரியே துடித்திடும்
பாமரமக்களே நேரினில் கண்டார்
கழனியில் வேலேயே செய்யாத மக்களின்
கஷ்டமே நிவர்த்தி செய்தார்

பாட்டு

நூற்றுக்கு-எட்டணு விகிதம்
கடன் மசோதா செய்த புனிதன் ஆ

## ஸ்ரீஜத் ஜவஹாலால் அவர்கள்

## ஐயா சிறுப்பேண் என்ற மேட்டு

அந்தோ ஜவஹர் லாலே யின்று அரஸ்டு செய்தனரே
அரியாதனமாய் உலகமதில் சேதி சொன்னாரே சிறை
சாலே சென்றனரே (அ

முடிசூடா மன்னரென அவனியில் புகழ்ந்தார்
மக்கள் சுகம் பெறவே பிரசங்கம் புரிந்தார்
அவசரமாகவல்லோ வாரண்டு தந்தார் நம்
தேசியதலேவர்களை இம்சையே புரிந்தார் கடுங்
காவலில் அடைத்தார் (அ

காந்தியுடன் வார்தாவில் பேசியே வந்தார்
காலமதிலே நடக்கும் விஷயத்தை பனர்ந்தார்
அலகாபாத் ரயிலிலேரி நடுவழி சென்றார்
அரசாங்கத்தாரும் பின்தொடர்ந்து பிடித்திடவந்தார்
கோரகப்பூர் பிரசங்கத்தில் பேசியதாலே
கோரமாகவே நடக்கும் வாதத்தினாலே
உதவிசெய்ய கூடாதென சொன்னதினாலே கேள்
உத்தரவு மீறி இவர் பேசியதாலே சட்டம்
தந்தார் பின்னாலே (அ

உலகமதில் ஜவஹர் போலே தியாகியுமேது
உண்மையாக நடக்கும் சேதி சொன்னாரப்போது
அதை யுணர்ந்த ஜட்ஜியவர் சொன்னதை யோது
நான்கு வருடமென கடுங்காவலில் வைத்தாரப்போது
வேணு கவிகளை யோது (அ

## ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி அவர்கள்

## சிறைவாயில் தனில் என்ற மெட்டு

பல்லவி

சிறைதனிலே நுழைந்தார்
ருக்மணி அம்மாள் (சி)

அநுபல்லவி

குறைவிலா செல்வி குடும்ப மேதாவி
காந்திமகான் துணைவி-பெண்களில் சிங்கம் (சிறை

தொகையரு

ஆயிரத்தொளாயிரத்து ஆண்டு முப்பத்தொன்றில்
உப்பு சத்யாகிரகம் செய்தார்
பயங்கரபோரினில் கள்ளுக்கடை மறியலில்
பாங்கான தியாகம் செய்தார்
சுயராஜ்யம் பெரவே சீமைதுணி மறியலில்
சாக்கடை தண்ணீர் அடித்தார்
ஜெயமது பெரவே ருக்மணி லக்ஷ்மிபதி
தேசத்திற்கே உழைத்தார்

பாட்டு

சந்தச்சுராபகாதம்-சங்கீத வேணுகீதம்
சாற்றும் சுதந்திரமே-உலகமதில் சிறை

## காங்கரஸ் மந்திரிகள் எம். எல். ஏ.-க்கள் தேசிய தலைவர்கள் தொண்டர்கள் சிறைசென்ற

# அரஸ்டு ரிஸல்ட்டு

| | | |
|---|---|---|
| சென்னை முதல் மந்திரி கனம் ராஜாஜிக்கு | 1 | வருடம் |
| தொழிளாளர் மந்திரி வி. வி. கிரி | 1 | ,, |
| மாஜி மந்திரி கோபால் ரெட்டி | 1 | ,, |
| விவசாய இலாகா மந்திரி ஸ்ரீஜத் டி. பிரகாசம் | 1 | ,, |
| வைத்திய இலாகா மந்திரி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் | 1 வருடம் 1000 ரூபாய் அபராதம் | |
| ஸ்ரீ பக்தவத்சலம் | 1 | வருடம் |
| ஸ்ரீ பாபநீடு எம். எல். எ. | 1 | ,, |
| ஸ்ரீ ராமகிருஷ்ணராஜு | 1 | ,, |
| ஸ்ரீ கோவிந்தாஸ் (ஹரிஜன்) | 8 | மாதம் |
| ஸ்ரீ அப்துல சத்தாருக்கு | 1 | வருடம் |
| தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி காரியதரிசி அண்ணாமலை பிள்ளை, எம். எல். ஏ | 9 | மாதம் |
| அஞ்சலையம்பாள் எம், எல். ஏ. | 6 | மாதம் |
| கும்பகோணம் வெங்கடராமையர் | 1 | வருடம் |

ராமலிங்க ரெட்டி எம். எல். ஏ. 9 மாதம்
சேலம் ஏ. சுப்ரமண்யத்திற்கு 1 வருடம்
ஸ்ரீஜத்-ஜவர்லால் நேரு 4 ,,
ஸ்ரீஜத்-சர்தார் படேல் 1 ,,
ஸ்ரீஜத்-வினோபா 3 மாதம்
ஸ்ரீஜத்-பிரம்மதத்தர் 1 வருடம்
மாஜிமந்திரி-பண்டித பந்த் 1 ,,
பம்பாய் முதல் மந்திரி ஸ்ரீ கேர் விசாரணை இல்லை
ஸ்ரீமதி-ருக்மணி லக்ஷ்மிபதி 1 வருடம்
தஞ்சை பூவராகவனுக்கு 1 ,,
கோவை ஜில்லா என். ஜி. ராமசாமி 1 ,,
திருச்சி மேயர் ரத்தினவேலு தேவர் 1 ,,
மதுரை ஜில்லா ஸ்ரீகிருஷ்ணசாமி பாரதி 1 ,,
டில்லி அஷப் அலி 1 ,,
அசெம்பிளி தலைவர் புலாபாய் தேசாய் கைதியானார்
காங்கிரஸ் கமிட்டி தலைவர் சரோஜினி தேவி கைதியானார்
ராஜமகேந்திரம் கே. லிங்கராஜு 1 வருடம் 6 மாதம்
ஆரணியில் எம். எல். ஏ.-க்கள் சத்யாக்ரஹாம்!
சென்னை ராஜாங்க சபை தலைவர் புலுசு சாம்பவ
மூர்த்தி—கைதியானார்
பிஹார் மந்திரி அரஸ்டு செய்தார்
ஸ்ரீ சத்யநாராயண சின்ஹா—அரஸ்டானார்

**இன்னும் மற்றவர் விபரம் இரண்டாம்
பாகத்தில் பார்க்கவும்**

---

இப்புத்தகம் கிடைக்குமிடம் :
**V. P. சுப்ரமண்யம், நேஷனல் டைலர் ஷாப்,**
நெ. **296**, சௌக்கார்பேட்டை போஸ்டு,
**மதருஸ்.**

**V. R. பெருமாள் நாயுடு,**
ஆனைகெவுனி போலீஸ் ஸ்டேஷன் பக்கத்தில்,
கல்யாண வெங்கடேச பெருமாள் தேவஸ்தானம்,
**மதருஸ்,**

---

**Printed at the Srinivas Press 114, China Bazaar Road Madras**

20/4/98
[illegible]